# TIRUNELVELI DISTRICT LEGAL SERVICES AUTHORITY

# ASSISTANT LEGAL AID DEFENSE COUNSEL

# WRITTEN EXAM – 2024 (FINAL ANSWER KEY)

After considering the objection received for various questions from the candidates, the following is the **Final Answer Key** for all the Questions for the post of Assistant Legal Aid Defense Counsel Written exam 2024.

NAME: ____________ Enrollment No: ____________

# TIRUNELVELI DISTRICT LEGAL SERVICES AUTHORITY

## POST FOR ASSITANT LEGAL AID DEFENSE COUNSEL

## WRITTEN EXAM – 2024

**TIME : 01 Hour** **TOTAL MARKS : 50**

### முக்கிய அறிவுரைகள்

1) இந்த வினாத் தொகுப்பு தேர்வு தொடங்குவதற்கு 10 நிமிடங்களுக்கு முன்னதாக உங்களுக்கு வழங்கப்படும்.
2) இந்த வினாத் தொகுப்பு 50 வினாக்களைக் கொண்டுள்ளது. விடையளிக்க தொடங்கும் முன் இவ்வினாத் தொகுப்பில் எல்லா வினாக்களும் வரிசையாக இடம் பெற்றுள்ளனவா என்பதையும் இடையில் வினாக்கள் அச்சு செய்யபடாமல் விடுபட்டு வெள்ளைத்தாள்கள் எவையேனும் உள்ளனவா என்பதையும் வினாக்கள் சரிபார்த்துக் கொள்ளவும். **ஏதெனும் குறைபாடு இருப்பின், அதனை பத்து நிமிடங்களுக்குள் அறைகண்காணிப்பாளரிடம் தெரிவித்து. சரியாக உள்ள வேறொரு வினாத் தொகுப்பினை பெற்றுக் கொள்ள வேண்டும். தேர்வு தொடங்கிய பின்பு இது குறித்து முறையிட்டால் வினா தொகுப்பு மாற்றித் தரப்படமாட்டாது.**
3) எல்லா வினாக்களுக்கும் விடையளிக்கவும். எல்லா வினாக்களுக்கும் சமமான மதிப்பெண்கள் கொண்டவை.
4) **உங்களுடைய பெயர் மற்றும் வழக்கறிஞர் பதிவு எண்ணை ஒவ்வொரு பக்கத்திலும் மேலே அமைந்துள்ள கட்டத்தில் நீங்கள் எழுத வேண்டும்.** வேறு எதையும் வினாத் தொ11குப்பில் எழுத கூடாது.
5) ஒவ்வொரு வினாவும் (A), (B), (C) மற்றும் (D) என நான்கு விடைகளைக் கொண்டுள்ளது. நீங்கள் அவைகளில் ஒரே ஒரு சரியான விடையைத் தேர்வு செய்து **<u>நீலம் அல்லது கருமை நிற மையுடைய பந்து முனைப்பேனாவினால்</u>** (✓) என குறித்து காட்ட வேண்டும். ஒன்றுக்கு மேற்பட்ட சரியான விடைகள் ஒரு கேள்விக்கு இருப்பதாகக் கருதினால், மிகச்சரியானது என நீங்கள் எதைக் கருதுகிறீர்களோ அந்த விடையை வினாத்தாளில் (✓) என குறித்து காட்ட வேண்டும். எப்படியாயினும் ஒரு கேள்விக்கு ஒரு விடையைத் தான் தேர்ந்தெடுக்க வேண்டும்.
6) ஒரு கேள்விக்கு ஒன்றுக்கு மேற்பட்ட விடையளித்தால் அந்த விடை தவறானதக் கருதப்படும்.
7) நீங்கள் வினாத் தொகுப்பின் எந்தப் பக்கத்தையும் நீக்கவோ அல்லது கிழிக்கவோ கூடாது. தேர்வு நேரத்தில் இந்த வினாத் தொகுப்பினையோ தேர்வுக் கூடத்தை விட்டு வெளியில் எடுத்துச் செல்லக்கூடாது. **<u>தேர்வு முடிந்தபின் நீங்கள் விடையளித்த வினாத்தொகுப்பினை கண்காணிப்பாளரிடம் 11கொடுத்து விட வேண்டும்.</u>**
8) நீங்கள் விடையளிக்காமல் உள்ள வினாக்களின் மொத்த எண்ணிக்கையை வினாத்தாளின் கடைசிபக்கம் அதற்கென உரிய கட்டத்தில் எழுத வேண்டும். இதற்கென கூடுதலாக ஐந்து நிமடங்கள் வழங்கப்படும்.
9) வினாத்தொகுப்பில் கொடுக்கபபட்டுள்ள நீதிமன்றத்தின் பெயர், இடம், கட்சிகாரர்களின் பெயர் உள்ளிட்ட தகவல்கள் கற்பனையானவை, அவை உண்மையானவையாகவோ. சட்ட ரீதியாகவோ இல்லாமல் இருக்கலாம். இருப்பினும், நீங்கள் வேறு வகையில் விளக்கம் கொள்ளாமல் விடையளிக்கும் நோக்கத்தின் பொருட்டு அவை உண்மையானவை எனக் கருத வேண்டும்.
10) கொடுக்கப்பட்டுள்ள தகவல்களின் அடிப்படையிலேலே நீங்கள் பதிலளிக்க வேண்டும். நீங்கள் கூடுதல் தகவல்ளை யுகிக்கவோ, அனுமானிக்கவோ கூடாது.
11) மேற்கண்ட அறிவுரைகளில் எதையாவது மீறினால் தேர்வு குழு முடிவெடுக்கும் நடவடிக்கைகளுக்கு உள்ளாக நேரிடும் என அறிவுறுத்தப்படுகிறது.

NAME: [ ] Enrollment No: [ ]

1) A servant collected money from the debtor of his master as authorized by him. The servant retained the money because it was due to him as wages. He commits?

(A) Criminal breach of trust (B) Theft

(C) No offence ✓(D) Criminal misappropriation

ஒரு வேலையாள் அவருடைய முதல்வர் அதிகாரம் அளித்தபடி அவரின் முதல்வருக்கு வரவேண்டிய கடன் தொகையை வசூலித்தார். அவருக்கு சம்பள பாக்கி இருப்பதால், வேலையாள் வசூலித்த பணத்தை தானே வைத்துக்கொண்டார். அவர் கீழ்கண்ட எந்த குற்றத்தை புரிந்தவராகிறார்?

(A) குற்ற நம்பிக்கை மோசடி (B) திருட்டு

(C) குற்றம் எதுவும் இல்லை (D) குற்றமுறு கையாடல்

2) Which among the following plea taken by the counsel for the accused binds the accused?

(A) Plea dispensing with proof of a document ✓(B) Plea of guilty

(C) to dispense with a witness by admitting a certifcate issued by a doctor

(D) none of the above

கீழ்கண்டவற்றில் எந்த வார்த்தை குற்றம் சாட்டப்பட்டவருக்காக அவர் வழக்கறிஞர் எடுத்தால் அது குற்றஞ்சாட்டப்பட்ட வரை கட்டுபடுத்தும்?

(A) ஒரு ஆவணத்தின் நிரூபிப்பதை விலக்களிக்கும் வாதம்

(B) குற்றத்தை ஒப்புக்கொள்ளுதல்

(C) மருத்துவர் வழங்கும் சான்றிதழை ஒப்புக்கொண்டு சாட்சியை விசாரிப்பதிலிருந்து விலக்களித்தல

(D) மேலே கண்ட எதுவும் இல்லை

3) Definition of an “intermediary” includes

(A) Cyber Crime (B) Network Service Provider

(C) Online Shoppping Platform ✓(D) All of the above

இடையீட்டாளர் என்பது?

(A) கணினி மையம் (B) இணைய சேவை வழங்குபவர்

(C) இணைய வழி பொருள் வாங்கும் தளம் (D) மேலே கண்ட அனைத்தும்

**NAME:** ____________ **Enrollment No:** ____________

4) "A" finds a valuable on the road. He immediately selss it without attempting to discover the owner. He is said to have committed?

(A) Fraud
(B) Theft
✓(C) Misappropriation
(D) No offence at all

சாலையில் விலை மதிக்கத்தக்க ஒரு மோதிரத்தை கண்டெடுத்த A என்பவர் அதன் உரிமையாளரை கண்டுபிடிக்க முயற்சி செய்யாமல் உடனடியாக விற்றுவிடுகிறார். கீழ்கண்டவற்றில் A எந்த குற்றத்தை செய்தவராகிறார்?

(A) ஏமாற்றுதல்
(B) திருட்டு
(C) கையாடல்
(D) எந்த குற்றமும் இல்லை

5) Which of the following is false about a private document?

(A) All the documens other than public documents are private documents
(B) A private document is prepared by a person for his private interest under private right
(C) Private documents is in the custody of the person to whom it belongs and is not available for general inspection to public
✓(D)As a general rule, the Court is bound to presume the genuineness of a private document from the duly certified secondary copy

தனியார் ஆவணம் குறித்து கீழ்கண்டவற்றில் எது தவறனாது?

(A) பொது ஆவணங்கள் அல்லாத. மற்ற அனைத்து ஆவணங்களும் தனியார் ஆவணங்கள் ஆகம்
(B) தனியார் உரிமையின் கீழ் ஒரு நபரின் தனிப்பட்ட நலனுக்காக ஒரு நபரால் தயார் செய்யப்படும் ஆவணம்
(C) தனியார் ஆவணம் என்பது அது யாருக்கு பாத்தியப்படடதோ அந்த நபரின் உடையமையில் இருப்பது அது பொதுமக்களின் ஆய்வுக்கு கிடைக்கத்தக்கதில்லை.
(D) பொதுவாக முறையாக சான்றிடப்பட்ட இரண்டாம் நகலிலிருந்து ஒரு தனியார் ஆவணத்தின் உண்மை தன்மை குறித்து அனுமானித்துக்கொள்ள நீதிமன்றம் கடமைப்பட்டுள்ளது.

6) Hearsay evidence is generally inadmissible. However, in certain cases, it is admissible. Which of the following is a such a case?

(A) Res gestae
(B) Admission and Confession
(C) Dying declaration
✓(D) All of the above.

NAME: Enrollment No:

கேள்விப்பட்ட சாட்சியம் பொதுவாக ஏற்கத்தக்கதில்லை எனினும் சில குறிப்பிட்ட வழக்குகளில் அது ஏற்கதக்கதாகும் கீழக்கண்ட எத்தகைய வழக்கில் அதை ஏற்கலாம்?

(A) ஒன்றிய செயல்

(B) ஒப்புக்கொள்ளுதல் மற்றும் ஒப்புதல் வாக்குமூலம்

(C) மரண வாக்கு மூலம்

(D) மேலே கண்ட அனைத்தும்

7) One night Ravi and Keshav were having heated argument in Ravi's office. Keshav left with angry slamming the office door violently behind him. The force of Keshav's action caused the door lock to jam and Ravi was unable to open the door to leave his office until a locksmith was able to come the next day. Ravi sued for wrongful confinement.

(A) Keshv's act caused Ravi to be confined, hence it is wrongful confinement

(B) Keshav was negligent is slamming the door

(C) Ravi was in his own office, hence it is not wrongful confinement.

✓(D) Keshav did not intend to jam the lock, hence is not wrongful confinement.

ரவி என்பவரின் அலுவலகத்தில் ஒரு நாள் இரவு ரவிக்கும், கேசவ் என்பவருக்கும் இடையே கடுமையான வாக்குவாதம் நடந்து கொண்டிருந்தது. கேசவ் கோபமாக தனக்கு பின்புறத்திலிருந்து கதவை சடாரென மூடினார். அவ்விதம் வேகமாக மூடியதால் கதவின் பூட்டு அடைத்துக்கொண்டது. முறநாள் பூட்டை சரிசெய்பவர் வரும் வரை ரவியால் கதவைத் திறந்து அலுவலத்தை விட்டு வெளியே செல்ல முடியாமல் இருந்தார். தவறாக அடைத்து வைத்ததாக கூறி ரவி என்பவர் கேசவ் மீது வழக்கைத் தாக்கல் செய்தார்.

(A) கேசவ் என்பவரின் செயலால் ரவி அடைக்கப்பட்டார். ஆகவே அது தவறான அடைப்பு தான்.

(B) கேசவ் படாரென்று கதவை மூடுவதில் கவனக்குறைவாக இருந்தார்.

(C) ரவி அவரது சொந்த அலுவலில் தான் இருந்தார். ஆகவே அது தவறான அடைப்பு ஆகாது.

(D) பூட்டு அடைபட கேசவ் எண்ணியருக்கவில்லை. ஆகவே அது தவறான அடைப்பு இல்லை.

8) Which of the following is not a substantive piece of evidence?

(A) Expert evidence

(B) Test Identification Parade

(C) Inquest report

✓(D) All of the above

கீழ்கண்டவற்றில் எது உறுதியான சாட்சியம் இல்லை?

(A) நிபுணரின் சாட்சியம்

(B) அடையாள அணிவகுப்பு

(C) பிரேத விசாரணை அறிக்கை

(D) மேலே கண்ட அனைத்தும்

NAME: [ ] Enrollment No: [ ]

9) Common intention implies?

(A) Similar intention (B) Pre-arranged planning

✓(C) Presence of common knwolege (D) Common design for common objects

“பொதுவான எண்ணம்” என்பது?

(A) ஒரே மாதிரியான எண்ணம் (B) முன்கூட்டியே ஏற்பாடு செய்யப்பட்ட திட்டம்

(C) பொதுவான அறிவு இருப்பது (D) பொது நோக்கத்திற்கான பொது திட்டம்

10) Which among the following statements is not true with respect to information to police?

Statement 1 : The report must be given by a person who has personal knowledge of the incident

Statement 2: The informant need not be an eye witeness to the incident.

Statement 3 : FIR can be used to corroborate or contradict the maker of the statement.

✓(A) Statement 1 (B) Statement 2

(C) Statement 3 (D) Statement 2 and 3

காவல்துறைக்கு தகவல் தெரிவிப்பது சம்பந்தமாக கீழ்கண்ட கூற்றுகளில் எது தவறானது?

கூற்று 1:சம்பவத்தைப் பற்றி சுயமாக தெரிந்த நபர் மட்டுமெ தகவல் கொடுக்க வேண்டும்.

கூற்று 2 : தகவல் கொடுப்பவர் சம்பவத்தை நேரடியாக பார்த்த சாட்சியாய இருக்க வேண்டிய அவசியமில்லை

கூற்று 3 : முதல் தகவல் அறிக்கையை அதை கொடுத்தவரின் வாக்குமூலத்தை உறுதிப்படுத்தவோ அல்லது முரண்படுத்தவோ பயன்படுத்தலாம்.

(A) கூற்று 1 (B) கூற்று 2

(C) கூற்று 3 (D) கூற்று 2 மற்றும் 3

11) To which of the following, the law of presumption applies?

(A) Volenti non fit injura ✓(B) Mens rea

(C) De minimus non curat lex (D) None of them

கீழ்கண்டவற்றில் எதற்கு அனுமான கோட்பாடு பொருந்தும்?

(A) அனுமதி நடவடிக்கையை தடுக்கம் (B) குற்ற மனம்

(C) மிக சிறிய நஷ்டங்களுக்கு சட்டப்படியான நிவாரணம் இல்லை

NAME: [    ]          Enrollment No: [    ]

(D) மேற்கண்டவற்றில் எதுவமில்லை

12) ✱ Procedure when corporation or registered society is an accused is given in?

(A) Section 302 Cr.P.C./Sec. 342 BNSS (B) Section 387 Cr.P.C./Sec. 428 BNSS

(C) Section 280 Cr.P.C./Sec. 315 BNSS (D) Section 289 Cr.P.C./Sec. 324 BNSS

சட்டத்தின் எந்த பரிவின் கீழ் ஒரு நிறுவனம் அல்லது ஒரு பதிவு செய்யப்பட்ட சொசைட்டி குற்றவாளியாக இருந்தால் அதற்கான வழிமுறைகள் வகுக்கப்பட்டுள்ளன?

(A) கு.வி.மு.ச. பிரிவு 305/பி.என்.எஸ்.எஸ் பிரிவு 342 (B) கு.வி.மு.ச. பிரிவு 387/பி.என்.எஸ். எஸ்.பிரிவு 428

(C) கு.வி.மு.ச. பிரிவு 280/பி.என்.எஸ்.எஸ். பிரிவு 315 (D) கு.வி.மு.ச. பிரிவு 289/பி.என்.எஸ்.எஸ். பிரிவு 324

13) Retention of records provided by law can be done?

(A) by preserving the documents in a physical form

✓(B) by preserving the documents in a electronic form

(C) by printing the documents in high quality paper

(D) by recording the contents on a voice recorder

சட்டப்படி பாதுகாக்கப்பட வேண்டிய ஆவணத்தை?

(A) அது இருக்கும்படியே பாதுகாக்கலாம்

(B) மின் பொருள் வடிவமாக பாதுகாக்கலாம்

(C) உயர்ந்த காகிகதத்தில் அச்சடித்து பாதுகாக்கலாம்

(D) ஒலி நாடாவில் பதிவு செய்து பாதுகாக்கலாம்

14) Which section of the Negotiable Instruments Act defines the words, “Negotiable Instrument”?

(A) Section 15 (B) Section 14

(C) Section 13 A ✓(D) Section 13

நெகோஷியபிள் இன்ஸ்ருமெண்ட் சட்டத்தின் எந்தப் பிரிவு “நெகோஷியபிள் இன்ஸ்ருமெண்ட்” என்ற வார்த்தைகளை வரையறுக்கிறது?

(A) பிரிவு 15 (B) பிரிவு 14

(C) பிரிவு 13 A (D) பிரிவு 13

**NAME:**      **Enrollment No:**

15) Shared household under the provisions of the protection of women from domestic violence Act 2005 includes?

(A) The house belonging to the woman

(B) The house belonging to the husband of the woman

(C) The house belonging to the joint family of which the husband is a member

✓(D) All the above.

2005 ஆம் வருடத்திய மனைசார் குடம்ப வன்முறையிலிருந்து பெண்களை காக்கும் சட்டத்தின் கீழ் பங்கீடு செய்து கொள்ளப்பட்ட வீடு என்பது கீழ்கண்டவற்றில் எதை உள்ளடக்கியது?

(A) பெண்ணிற்கு உரிமையான வீடு     (B) பெண்ணின் கணவனுக்கு உரிமையான வீடு

(C) கணவன் உறுப்பினராக உள்ள கூட்டு குடம்பத்திற்கு சொந்தமான வீடு

(D) மேற்கண்ட மூன்றும்

16) The presumption under Section 85B relating to electronic records is?

(A) Absolute     ✓(B) Rebuttable

(C) Partial     (D) None of the above

பிரிவு 85B இன் படி ஒரு மின் பொருள் ஆவணத்தில் கண்டுள்ள கூற்றுகள் உண்மையானவை என்று அனுமானம்?

(A) முழுமையானது     (B) மறுக்க கூடியது

(C) பகுதியாக முழுமையானது     (D) மேற்கண்டவற்றில் எதுவுமில்லை

17) Wrongful confinement in secret is dealt under?

(A) Section 344 of IPC/Sec.127 (4) BNS (B)Section 345 of IPC/Sec.127 (5) BNS

✓(C) Section 346 of IPC/Sec.127 (6) BNS (D) Section 347 of IPC/Sec.127 (7) BNS

கீழ்கண்டவற்றில் எந்த பிரிவின் கீழ ரகசிய இடத்தில் அடைத்து வைத்தல் என்ற குற்றம் வரையறுக்கப்பட்டுள்ளது?

(A) இ.த.ச. பிரிவு 344/பி.என்.எஸ். பிரிவு 127 (4)     (B) இ.த.ச. பிரிவு 345/பி.என்.எஸ். பிரிவு 127 (5)

(C) இ.த.ச. பிரிவு 346/பி.என்.எஸ். பிரிவு 127 (6)     (D) கு.வி.மு.ச. பிரிவு 347/பி.என்.எஸ். பிரிவு 127 (7)

NAME: Enrollment No:

18) Northwithstanding anything contained in the Cr.P.C., 1973, the offence under sub section (1) of Section 31 of the Protection of Women from Domestice Violence Act, 2005, shall be?

(A) Cognizable and bailable ✓(B) Cognizable and non-bailable

(C) Non-Cognizable and non-bailable (D) Non-Cognizable and bailable

2005ஆம் வருடத்திய மனைசார் வன்முறையிலிருந்து பெண்களை காக்கும் சட்டம் பிரிவு 31 (1) இன் கீழ் செய்யப்படும் குற்றமானது 1973 ஆம் வருடத்திய குற்றவியல் நடைமுறை சட்டத்தின் விதிகளுக்கு அப்பாற்பட்டு?

(A) புலன் கொள்ளக்கூடியது மற்றும் பிணையில் விடக்கூடியது

(B) புலன் கொள்ளக்கூடியது மற்றும் பிணையில் விட முடியாது

(C) புலன் கொள்ள முடியாதது மற்றும் பிணையில் விட முடியாதது

(D) புலன் கொள்ள முடியாதது மற்றும் பிணையில் விடக்கூடியது

19) Extra territorial offences are mentioned under?

(A) Section 3 of IPC/Sec.1(4) of BNS (B) Section 2 of IPC/Sec.1(3) of BNS

✓(C) Section 4 of IPC/Sec.1(5) of BNS (D) None of the above.

இந்திய எல்லைகளுக்கு வெளியே செய்யப்படும் குற்றங்கள் இந்தியத் தண்டனைச் சட்டத்தின் எந்த பிரிவின் கீழ் வரையறுக்கப்பட்டுள்ளது?

(A) இ.த.ச. பிரிவு 3/பி.என்.எஸ். பிரிவு 1 (4) (B) இ.த.ச. பிரிவு 2/பி.என்.எஸ். பிரிவு 1 (3)

(C) இ.த.ச. பிரிவு 4/பி.என்.எஸ். பிரிவு 1(5) (D) மேற்கண்டவற்றில் எதுவுமில்லை.

20) In an appeal by the drawer against conviction under section 138, the Appellate Court may order the appellant to deposit such sum which shall be a minimum of _________ or compensation award by the trial court?

(A) Ten per cent of the fine (B) Fifteen per cent of the fine

✓(C) Twenty per cent of the fine (D) Twenty five per cent of the fine

NAME: [ ] Enrollment No: [ ]

பிரிவு 138 இன் கீழ் தண்டணைக்கு எதிரான காசோலை வழங்கியவரின் மேல்முறையீட்டில், மேல்முறையீட்டு நீதிமன்றம் மேல்முறையீட்டாளருக்கு குறநைந்தபட்சம் __________ அல்லது விசாரணை நீதிமன்றத்தால் வழங்கப்படும் இழப்பீடாக இருக்கும் தொகையை டெபாசிட் செய்ய உத்தரவிடலாம்?

(A) அபாராதத்தில் பத்து சதவீதம்

(B) அபாராதத்தில் பதினைந்து சதவீதம்

(C) அபாராதத்தில் இருபது சதவீதம்

(D) அபாராதத்தில் இருபத்தைந்து சதவீதம்

21) "A" is frequently beating his wife "B". The complainant of "B" to her parents soon thereafter and her feelings about "A" are?

(A) Irrelevant since they are hearsay

(B) Relevant under Section 8 of the Indian Evidence Act/ Section 6 of BSA

(C) Relevant under Section 14 of the Indian Evidence Act/ Section 12 of BSA

✓(D) (B) and (C) above

"A" அடிக்கடி தனது மனைவி B-ஐ அடித்து வருகிறார். இவ்வாறான நிகழ்விற்கு சற்று பின்னர் டீ தனது பெற்றோரிடம் முறையிடுவதும் மற்றும் A-ஐ பற்றிய அவளது உள்ளுணர்வுகளும்?

(A) கேள்வி அறிவானதால் தொடர்பற்றவை

(B) இந்தியச் சாட்சியச் சட்டம் பிரிவு-8ன் கீழ்/பாரதிய சாக்திய அதிநியம் பிரிவு 6 ன்கீழ் தொடர்புடையது

(C) இந்தியச் சாட்சியச் சட்டம் பிரிவு-14ன் கீழ்/பாரதிய சாக்திய அதிநியம் பிரிவு 12 ன்கீழ் தொடர்புடையது

(D) மேற்கண்ட (B) -யும், (C)-யும்

22) A person arrested for an offence of grievious hurt can be remanded to police custody during the first 15 days of remand?

✓(A) Any number of times

(B) Only once

(C) Only for 3 days

(D) None of the above.

**NAME:** | **Enrollment No:**

இ.த.ச. பிரிவு 324-ன் கீழான குற்றத்திற்காக வேண்டி கைது செய்யப்பட்டிருக்கிற நபரை, முதல் 15 நாட்களுக்குள்ளான காவல் வைப்பின் போது, காவல் பிடியில் வைத்து உத்தரவிடலாம்?

(A) எத்தனை முறை வேண்டுமானாலும் (B) ஒரே ஒரு முறை மட்டுமே

(C) 3 நாட்களுக்ககு மட்டும் (D) மேற்கண்ட எதுவுமில்லை

23) "A" beats his wife "B" severly. In self defence, "B" attacks "A" with a knife and causes A's death. This is witnessed by thier major son "C" who intentionally omits to give any information of the offences to the police

✓(A) "C" is liable for omission to give information of the offence

(B) "C" is not liable for omission to give information because "B" caused the death of "A" in self defence

(C) "B" is liable for omission to give information of the death "A"

(D) "B" and "C" are jointly liable for omission to give information of the offence

"A" தனது மனைவி "B"-கை கடுமையாக அடிக்கிறார். தற்காப்பிற்காக, "B"கத்தியால் "A"-ளை தாக்கி அதன் விளைவாக "A" இறந்து விடுகிறார். இந்நிகழ்விற்கு சாட்சியான உரிமை வயதடைந்த அவர்களது மகன் "C" உட்கருத்துடன் குற்றம் குறித்த ஏதொரு தகவலையும் தெரிவிக்கத் தவறுகிறார்.

(A) குற்றச் செயல் குறித்த தகவலை தெரிவிக்கத் தவறிதற்காக "C' பொறுப்பாவார்

(B) குற்றச் செயல் குறித்த தகவலை தெரிவிக்கத் தவறியதற்காக "C" பொறுப்பாக மாட்டார். ஏனென்றால் "A" விற்கு விளைவித்த மரணமானது "ட"-யின் தற்காப்புரிமையை செயல்படுத்தியதால் ஏற்பட்டதாகும்.

(C) "A" யின் இறப்பு குறித்த தகவலை தெரிவிக்கத் தவறியதற்காக "B" பொறுப்பாவார்

(D) குற்றச் செயல் குறித்த தகவலை தெரிவிக்கத் தவறியதற்காக "B" யும் "C" யும் கூட்டாக பொறுப்பாவார்கள்.

24) "A" is married to "B". During the subsistence of marriage, "A" marries "C" with the consent of "B"

✓(A) "A" is liable for bigamy (B) "A" is not liablve for bigamy

(C) "A" is liable for cheating (D) "A" is liable for adultery

NAME: ____ Enrollment No: ____

"A"B"-யைத் திருமணம் செய்திருக்கிறார். திருமணம் நடப்பில் இருக்கும்போது A, B-யின் இசைவோடு, "C"ஐ த் திருமணம்செய்கிறார்.

(A) "A" இருதுணைமணக் குற்றத்திற்கு பொறுப்பாவார்

(B) "A" இருதுணைமணக் குற்றத்திற்கு பொறுப்பாகமாட்டார்

(C) "A" ஏமாற்றுதல் குற்றத்திற்கு பொறுப்பாவார்

(D) "A" பிறன்மனை புகதல் குற்றத்திற்கு பொறுப்பாவார்.

25) With which of the following issues did D.K. Basu Vs. State of West Bengal (AIR 1997 SC 610) deal with

(A) Safeguards against sexual exploitation ✓(B) Safeguards for arrested persons

(C) Safeguards for children (D) Safegurards for unorganized workers

பின்வருபவனற்றுள் எது குறித்த விடய்பபொருள் டி.கே.பாசு (எதிர்) ஸ்டேட். ஆப் வெஸ்ட் பெங்கால் (AIR 1997 SC 610) விவாதிக்கிறது?.

(A) பாலியல் சுரண்டலுக்கு எதிரான பாதுகாப்பு (B) கைது செய்யப்பட்ட நபர்களின் பாதுகாப்பு

(C) குழந்ததைகளுக்கான பாதுகாப்பு (D) அமைப்பு சாரா தொழிலாள்ாகளின் பாதுகாப்பு

26) A child who is less than 7 years old is

(A) Incompetent to testify in a Court of Law

✓(B) Competent to testify in a Court of Law on satisfying certain conditions

(C) Competent to testify through its natural guradian

(D) None of the above

7 வருடத்திற்கும் குறைவான ஒரு குழந்தை?.

(A) நீதிமன்றம் ஒன்றில் சாட்சியமளிக்க (testify) தகுதியற்றவர்

(B) சில நிபந்தனைகளை நிறைவு செய்யும் நிலையில் நீதிமன்றமொன்றில் சாட்சயமளிக்க தகுதியுடையவர்

(C) தனது இயற்கை காப்பாளர் மூலம் சாட்சியமளிக்க தகுதியுடையவர்

(D) மேற்கண்ட எதுவும் இல்லை

**NAME:** ______ **Enrollment No:** ______

27) Which of the following is not correct?

(A) A cheque is a form of Bill of Exchange

✓(B) A cheque is a form of Promissory Note

(C) A cheque includes the electronic image of truncated cheque

(D) A demand darft is a form of Bill of Exchange

பின்வருவனற்றில் எதுவொன்று சரியானது அல்ல?.

(A) ஒரு காசோலை என்பது மாற்றுச்சீட்டின் படிவம்

(B) ஒரு காசோலை என்பது கடனுறுதிச் சீட்டின் படிவம்

(C) காசோலை என்பது உருக்குலைந்த காசோலையின் (truncated cheque) மின்னனு படிவத்தையும் (electronic image) உள்ளடக்கியது.

(D) ஒரு கேட்பு வரைவோலை என்பது மாற்றுச்சீட்டின் படிவம் ஆகும்.

28) "A" and "B" are joint owners of a car. "A" takes the car from "B's" possession intending to use it, but, sells it and takes the whole money to himself. "A" ia liable for

(A) Theft

(B) Cheating

(C) Cheating by personation

✓(D) Dishonest misappropriation

A-வும், B-வும் கூட்டு உரிமையாளர்கள் (Joint owners). "B"-யின் உடைமையில் இருக்கும் அந்தக் காரை A பயன்படுத்தும் எண்ணத்தோடு பெற்று, பின்னார் அந்தக் காரை விற்பனை செய்து அதன் முழுப்பணத்தையும் அவரே எடுத்துக்கொண்டார். "A" இதற்கு பொறுப்பாவார்

(A) திருட்டு

(B) ஏமாற்றுதல்

(C) ஆள்மாறாட்டம் செய்து ஏமாற்றுதல்

(D) நேர்மையற்ற முறையில் கையாடல் செய்தல்

29) "A" a thief puts his hand into the pocekt of "B", a stranger to steal his purse, but, finds no purse in the pocket.

(A) "A" is liable for theft

(B) "A" is liable for robbery

(C) "A" is liable for preparation to commit theft

✓(D) "A" is liable for attempt to commit theft

NAME: [ ] Enrollment No: [ ]

"A" என்ற திருடன், B என்ற ஒரு அயலரின் பணப்பையை திருடவேண்டி, "B"-யின் பாக்கெட்டிற்குள் "A" தனது கையை விடுகிறார். ஆனால் பாக்கெட்டில் பணப்பை (purse ) ஏதும். இல்லை.

(A) "A" திருட்டிற்கு பொறுப்பாவார்

(B) "A" கொள்ளை குற்றத்திற்கு பொறுப்பாவார்

(C) திருட்டு குற்றம்புரிவதற்கான முன்னேற்பாட்டு குற்றத்திற்கு பொறுப்பாவார்

(D) திருட்டு முயற்சி குற்றத்திற்கு "A" பொறுப்பாவார்

30) The evidence of a post-mortem doctor in a murder case realting to the cause of death of the deceased is

(A) Binding on the Court

✓(B) Not binding on the Court

(C) Relevant under Section 45-A of the Indian Evidence Act/u/s. 39 (2) of BSA

(D) Relavant under section 47 of the Indivan Evidence Act/us. 41 (1) of BSA

கொலை வழக்கொன்றில் இறந்தவரின் இறப்பிற்கான காரணம் தொடர்பான சடலக்கூராய்வு மருத்துவரின் சாட்சியம்

(A) நீதிமன்றத்தை கட்டுபடுத்தும்

(B) நீதிமன்றத்தை கட்டுபடுத்தாது

(C) இந்திய சாட்சியச் சட்டம் பிரிவு 45-A யின் கீழ்/பாரதிய சாக்ஷிய அதிநியம் பிரிவு 39(2) பிரிவு தொடர்புடையதாகும்.

(D) இந்திய சாட்சியச் சட்டம் பிரிவு 47 யின் கீழ்/பாரதிய சாக்ஷிய அதிநியம் பிரிவு 41(1) பிரிவு தொடர்புடையதாகும்.

31) An arrested accused is entitled to

(A) have his advocate by his side during interrogation

✓(B) meet his advocate during interrogation

(C) have his near relative by his side during interrogation

(D) have his friend by his side during interrogation

கைது செய்யப்பட்டுள்ள ஒரு எதிர், உரிமை படைத்தவர் ஆவார்

(A) விசாரணையின் போது (Interrogation) அவரது வழக்கறிஞரை அவரது பக்கத்தில் வைத்து கொள்ள

(B) விசாரணையின் போது (Interrogation) அவரது வழக்கறிஞரை சந்திக்க

(C) விசாரணையின் போது (Interrogation) நெருங்கிய உறவினரை அவரது பக்கத்தில் வைத்து கொள்ள

(D) விசாரணையின் போது (Interrogation) அவரது நண்பரை பக்கத்தில் வைத்து கொள்ள

NAME: Enrollment No:

32) "A" finds on the road a cheque for Rs.10,000/- signed by "B" without the name of the drawee. "A" fills his name in the drawee column and encashes the cheque.

(A) "A" has committed cheating ✓(B) "A" has committed forgery

(C) "A" has committed misappropriation (D) "A" has committe mischief

"B" -யால் கையொப்பமிடப்பட்டிருந்த, பெயரவர் பெயர் குறிப்பிடப்படாத ரூபாய்.10,000-க்கான காசோலையை "A" சாலையில் கண்டெடுக்கிறார். "A" பெயரவர் பத்தியில் தனது பெயரை நிரப்பி, அக்காசோலையை பணமாக்குகிறார்.

(A) "A" ஏமாற்றுதல் குற்றம் புரிந்துள்ளார்

(B) "A" பொய்யாவாணம் புனைதல் குற்றம் புரிந்துள்ளார்

(C) "A" கையாடல் குற்றம் புரிந்துள்ளார்

(D) "A" சொத்தழிப்பு குற்றம் புரிந்துள்ளார்.

33) The photocopies of a document made by one uniform process by using a photocopier

✓(A) Are not primary evidence of the contents of the original

(B) Are primary evidence of the contents of the original

(C) Are not secondary evidence of the contents of the original

(D) None of the abvoe

ஒரு ஆவணத்தின் புகைப்பட நகல்கள், நகலெடுக்கும் இயந்திர்த்தின் (Photocopier) மூலம் ஒரே சீரான செய்முறையில் எடுக்கப்பட்டிருக்கிறது.

(A) அவைகள் அசலின் உள்ளடக்கங்களுக்கு முதல் நிலைச்ட சாட்சியம் ஆகாது

(B) அவைகள் அசலின் உள்ளடக்கங்களுக்கு முதல் நிலைச்ட சாட்சியம் ஆகும்

(C) அவைகள் அசலின் உள்ளடக்கங்களுக்கு இரண்டாம் சாட்சியம் ஆகும்

(D) மேற்கண்ட எதுவும் இல்லை

34) A person on bail, jumps bail and absconds, can be prosecuted afresh

(A) only for the offence in which he was on bail

✓(B) under Section 229-A IPC/under Section 269 BNS

(C) under Section 446-A Cr.P.C./under Section 492 BNSS

(D) under Section 176 IPC/under Section 211 BNS

NAME: Enrollment No:

பிணையில் இருக்கும் நபர் பிணை நிபந்தனைக்ளை பின்பற்றாமல் தலைமறைவாகி விடுகிறார். அதற்கு புதிதாக குற்ற வழக்கிட முடியும்.

(A) எந்த குற்றத்திற்காக பிணையில் இருந்து வந்தாரோ அந்த குற்றத்திற்கு மட்டும்

(B) இ.த.ச. பிரிவு 229-A /பி.என்.எஸ்.பிரிவு 269 -ன் கிழ்

(C) கு.வி.மு.ச. பிரிவு 446-A/பி.என்.எஸ்.எஸ்.பிரிவு 492 -ன் கிழ்

(D) இ.த.ச. பிரிவு 176/பி.என்.எஸ்.பிரிவு 211 -ன் கிழ

35) Summons to produce a document or other thing under Section 91 Cr.P.C./under Section 94 of BNSS

✓(A) any person, excluding the accused, to produce

(B) any person, including the accused to produce

(C) only the accused to produce

(D) only a witness to produce

கு.வி.மு.ச.பிரிவு 91/பி.என்.எஸ்.எஸ்.பிரிவு 94-ன் கிழ ˙ ஆவணங்களை அல்லது பொருட்களை முன்னிலைப்படுத்த, அழைப்பாணை மூலம் எவரைக் கட்டாயபடுத்தி உத்தரவிடலாம்?.

(A) எதிரியை தவிர்த்த எந்தவொரு நபரையும்

(B) எதிரியை உள்ளடக்கிய எந்தவொரு நபரையும்

(C) எதிரியை மட்டுமே

(D) சாட்சியை மட்டுமே

36) Which one of the following statements is not correct?

(A) Filling up the amount in a blank signed pronote is a material alteration

(B) Filling up the date in a signed cheque with amount and name of the payee is a material alteration

(C) When one person signs and delivers to another a stamped pronote duly signed either wholly blank or partially written gives a prima facie authority to the holder to fill up the amount covered by the stamp

✓(D) Any material alteration of a negotiable instrument without the consent of the maker is voidable.

NAME: Enrollment No:

பின்வரும் கூற்றுகளில் சரியில்லாதது எது?.

(A) முழுவதும் எழுதப்படாத (blank) கையொப்பமிட்ட கடனுறுதிச் சீட்டொன்றில் தொகையை நிரப்புவது ஒரு கருநிலைத் திருத்தம் ஆகும்.

(B) தொகைபெறுநர் பெயர் எழுதப்பட்ட தொகை குறிப்பிடப்பட்ட, கையொப்பம் செய்யப்பட்ட காசோலை ஒன்றில் தேதியை நிரப்புவது ஒரு கருநிலைத் திருத்தம் ஆகும்.

(C) முதிரையிட்ட கடனுறுதிச் சீட்டொன்றில், முழுவதும் எழுதப்படாமலோ அல்லது பகுதி எழுதப்பட்டடோ, ஒரு நபர் கையொப்பம் செய்து பிறிதொருவருக்கு ஒப்படைக்கிறவிடத்து, அதை கைகொண்டிருப்பவருக்கு, அக்கடனுறுதி சீட்டில் உள்ள முத்திரை வில்லை உள்ளடக்கும் தொகைக்கு நிரப்புவதற்கு முகநிலை அதிகாரம் வழங்குகிறது.

(D) மாற்றுமறை ஆவணமொன்றில், வரைபவரின் இசைவின்றி செய்யப்படும் எந்த ஒரு கருநிலைத் திருத்தமும் தவிர்தகு நிலையது ஆகும்.

37) (i) All confessions are admissions; (ii)All admissions are confessions.

(A) Both are correct (B) Both are wrong

✓(C) (i) alone are correct (D) (ii) alone are correct

(i) எல்லாக் குற்ற ஏற்புரைகளும் ஏற்புரைகளே, (ii) எல்லா ஏற்புரைகளும் குற்ற ஏற்புரைகளே

(A) இரண்டும் சரி (B) இரண்டும் தவறு

(C) (i) மட்டும் சரி (D) (ii) மட்டும் சரி

38) A dying declaration under section 32 (1) of the Indian Evidence Act/under section 26(a) of BSA is admissible

(A) Only in a Civil Case (B) Only in a Criminal Case

✓(C) In civil and criminal cases (D) None of the above

இந்தியச் சாட்சியச் சட்டம் பிரிவு 32(1) /பி.எஸ்.ஏ.பிரிவு 26(a) ன் கீழ் ஒரு மரண வாக்கு மூலம் அனுமதிக்கதக்கது ஆகும்

(A) உரிமை வழக்கொன்றில் மட்டும் (B) குற்ற வழக்கொன்றில் மட்டும்

(C) உரிமை வழக்குளிலும், குற்ற வழக்குகளிலும் (D) மேற்கண்ட எதுவும் இல்லை.

**NAME:**                      **Enrollment No:**

39) Under Section 139 of Negotiable Instrument Act

(A) Court shall not presume the execution of the cheque

✓(B) Court shall presume cheque issued for discharge of debt or liablility

(C) Court shall presume the date of the cheque

(D) The presumption is irrebutable

மாற்றுமுறையாவணங்கள் சட்டம் பிரிவு 139-ன் கீழ்

(A) காசோலையின் இயற்றரை நீதிமன்றம் அனுமானிக்க கூடாது

(B) கடன் அல்லது பொறுப்பை தீர்ப்பதற்காகவே காசோலை கொடுக்கப்பட்டிருக்கிறது என நீதிமன்றம் அனுமானிக்க வேண்டும்.

(C) காசோலையின் தேதியினை நீதிமன்றம் அனுமானிக்க வேண்டும்

(D) அனுமானம் மறுக்கொணரததது ஆகும்.

40) Warrant case includes

(A) A case which is not a sessions case

(B) A case in which the Police Officer can arrest only with a warrant

✓(C) A case relating to an offence punishable with imprisonment exceeding two years

(D) A case relating to an offence in which court can issue only a warrant for the appearance of athe accused

“பிடிகட்டளை வழக்கு” என்பது உள்ளடங்கியது

(A) அமர்வு வழக்கு அல்லாத ஒரு வழக்கு

(B) பிடியாணையின் பேரில் மட்டுமே காவல் அதிகாரி கைது செய்ய இயலும் என்றவாறான வழக்கு

(C) இரண்டாண்டுகளுக்கு மேற்பட்ட சிறைதண்டனைக்குரிய குற்றம் தொடர்பானதொரு வழக்கு

(D) எதிரி முன்னிலையாக வேண்டி நீதிமன்றம் பிடியாணை மட்டுமெ பிறப்பிக்க முடியும் என்றவாறான குற்றம் தொடர்பான வழக்கு

41) “X” has consensual sexual realtions with “Z’s” wife. She gives to “X” a valuable property which “X” knows to belong to her husband “Z” and she has no authority from “Z” to give “X” takes the property. Which one of the following offences has been committed by “X”?

(A) Criminal breach of trust      (B) Theft and criminal breach of trust

✓(C) Theft      (D) Criminal Misappropriation

NAME: ______ Enrollment No: ______

Zன் மனைவியுடன் ஒப்புதலின் பேரில் X உறவு வைத்துக் கொள்கிறார். Z க்கு சொந்தமான விலை மதிக்கத்தக்க ஒரு பொருளை அவரின் மனைவி Xக்கு கொடுக்கிறார். அது X க்கும் தெரியும். அதைக் கொடுக்க அவருக்கு Z அதிகாரம் கொடுக்கவில்லை. X அந்த பொருளை எடுத்துக் கொள்கிறார். கீழ்கண்டவற்றில் எந்த குற்றத்தை X புரிந்தவர் ஆவார்?

(A) குற்ற நம்பிக்கை மோசடி (B) திருட்டு மற்றும் குற்ற நம்பிக்கை மோசடி

(C) திருட்டு (D) குற்றமுறு கையாடல்

42) Under Section 9 of Indian Evidence Act/under Section 7 of BSA which of the following identifications is relevant?

(A) Identification of accused (B) Identification of deceased, victim body

(C) Identification of articles & vehicle ✓(D) All the above

இந்திய சாட்சிய சட்டம் பிரிவு 9/பாரதிய சாக்ஷிய அதிநியம் பிரிவு 7ன் கீழ், கீழ்கண்ட அடையாளங்களில் எது தெடர்புடையது ஆகும்?

(A) குற்றம் சாட்டப்பட்டவரை அடையாளம் காட்டுதல்

(B) இறந்தவரின் பிரேதத்தை அடையாம் காட்டுதல்

(C) பொருட்கள் மற்றும் வாகனத்தை அடையாளம் காட்டுதல்

(D) மேலே கண்ட அனைத்தும்

43) ‘A’ is invited by ‘B’ for a Cup of tea. While ‘B’ is in the Kitchen preparting tea, ‘A’ finds a golden ring on the table. He picks it up and places it somewhere in the room with the intention of dishonestly taking it away some time later. ‘A’ commits:

(A) no offence

(B) Cirminal misappropriation

(C) attempt to commit theft

✓(D) Theft

தேநீர் அருந்த A ஐ B அழைத்தார். B சமையலையில் தேநீரை தயார் செய்து கொண்டிருந்தபோது, மேஜையின் மீதிருந்த ஒரு தங்க மோதிரத்தை எடுத்து, அதை பின்னர் எடுத்துச் செல்லலாம் என்ற நேர்மையற்ற எண்ணத்தில் அறையின் வேறு ஒரு இடத்தில் வைத்து விட்டார். A கீழ்கண்டவற்றில் எந்த குற்றத்தை இழைத்தவராவார்?

(A) குற்றம் எதுவும் இல்லை (B) குற்றமுறு கையாடல்

(C) திருட முயற்சித்தல் (D) திருட்டு

**NAME:** ______ **Enrollment No:** ______

44) Illustartion 1: In case and counter, one case comes to the Magsitrate by way of private complaint while the other case goes to the police. The Magsitrate was informed that the counter case is pending investigation before the police.

Illustartion 2: In case and counter, one case comes to the Magistrate by way of private complaint and it involves offences triable by the Court of Sessions, While the other case goes to the police. The Magsitrate was informed that the counter case is pending investigation before the police.

Illustration 3 : A Labour Officer files a private complaint before the Judicial Magsitrate.

In which of the above illustrations, enquiry under Section 202 of Cr.P.C./under section 225 of BNSS ordered by the Judicial Magistrate.

(A) All the three ✓(B) Illustration 1 only

(C) Illustartion 2 only (D) Illustration 2 dn 3 only

உதாரணம் 1 : ஒரு வழக்கு மற்றும் எதிர் வழக்கில் ஒரு வழக்கு மட்டும் தனிப் புகார் மூலம் நீதித்துறை நடுவரிடம் வருகிறது மற்றொரு வழக்கு காவல்துறைக்கு செல்கிறது. ஏதிர் வழக்கு காவல் துறையினரிடம் புனல் விசாரணையில் இருக்கிறது என்று நீதித்துறை நடுவரிடம் தெரிவிக்கப்படுகிறது.

உதாரணம் 2 : ஒரு வழக்கு மற்றும் எதிர் வழக்கில் அமர்வு நீதிமன்றத்தில் மட்டுமெ விசாரிக்ககூடிய ஒரு வழக்கு தனிப் புகார் மூலம் நீதித்துறை நடுவருக்கு வருகிறது. மற்றொரு வழக்கு காவல்துறைக்கு செல்கிறது, எதிர்வழக்கு காவல்துறையிடம் புலன் விசாரணையில் இருக்கிறது என்று நீதித்துற நடுவருக்கு தெரிவிக்கப்படுகிறது.

உதாரணம் 3 : தொழிலாளர் அலுவலர் ஒருவர் நீதித்துறை நடுவரிடம் ஒரு தனிப்புகார் மனுவை தாக்கல் செய்கிறார்.

மேற்கூரிய உதாரணங்களில் எதில் நீதித்துறை நடுவர் கு.வி.மு.ச. பிரிவு 2022/பி.என்.எஸ்.எஸ். பிரிவு 225ன் கீழ் விசாரணைக்கு உத்தரவிட முடியும்?

(A) மேற்கூரிய மூன்று உதாரணங்களிலும் (B) உதாரணம் 2 மட்டும்

(C) உதாரணம் 2 மட்டும் (D) உதாரணம் 2 மற்றும் 3 மட்டும்

**NAME:** ____________ **Enrollment No:** ____________

45) Statutory Bail is granted to an accused under Section 167 of Cr.P.C. /under Section 187 BNSS which among the following statement is correct?

Statement 1 : the prosecution can seek for cancellation of bail under Section 437 of Cr.P.C./under Section 480 BNSS only after filing final report in the above situation.

Statement 2 : Court has powers to cancel bail only when it is granted under Section 437 of Cr.P.C./under Section 480 BNSS

Statement 3 : Question of Cancellation of bail will not arise when bail is granted under Section 167 of Cr.P.C.

(A) Statements 1 to 3 correct ✓(B) Statements 1 to 3 are incorrect

(C) Statement 1 alone is correct (D) Statement 2 alone is correct

குற்றவியல் நடைமுறைச் சட்டம் பிரிவு 167/பி.என்.எஸ்.எஸ். பிரிவு 187 கீழ், குற்றஞ்சாட்டப்பட்ட ஒருவருக்கு சட்டப்படியான பிணை வழங்கப்பட்டுள்ளது. கீழ்கண்டவற்றில் எந்த கூற்று சரியானது?

கூற்று 1 : இறுதி அறிக்கையை தாக்கல் செய்த பின்னரே மேற்கூறிய சூழிலையில் அரசு தரப்பில் பிணையை ரத்து செய்ய கு.வி.மு.ச. பிரிவு 437/பி.என்.எஸ்.எஸ். பிரிவு 480 கீழ் கோர முடியும்

கூற்று 2 : கு.வி.மு.ச. பிரிவு 437 ன் கீழ் பிணை வழங்கப்பட்டால் மட்டுமெ ஜாமீனை ரத்து செய்ய நீதிமன்றத்திற்கு அதிகாரம் இருக்கிறது.

கூற்று 3 : கு.வி.மு.ச. பிரிவு 167 ன் கீழ் ஜாமீன் கொடுக்கப்பட்டிருக்கும்போது ஜாமீனை ரத்து செய்வது பற்றிய கேள்வியே எழாது.

(A) கூற்றுகள் 1 முதல் 3 சரி (B) கூற்றுகள் 1 முதல் 3 சரியல்ல

(C) கூற்று 1 மட்டும் சரி (D) கூற்று 2 மட்டும் சரி

46) Nothing is an offence which is done by a child under _______ years of age:

(A) 5 Years ✓(B) 7 Years (C) 18 Years (D) 16 Years

__________வயதுக்கு உட்டபட்ட நபரால் செய்யப்படும் எதுவும் குற்றமாகாது?

(A) 5 (B) 7 (C) 18 (D) 16

NAME: ____ Enrollment No: ____

47) _____ permits joint trial of several persons.

(A) Sec. 221 of Cr.P.C./Sec. 244 of BNSS (B) Sec. 222 of Cr.P.C./Sec. 245 of BNSS

✓(C) Sec. 223 of Cr.P.C./Sec. 246 of BNSS (D) Sec. 224 of Cr.P.C./Sec. 247 of BNSS

எந்த பிரிவு பல குற்றவாளிகளை ஒன்றாக இணைத்து விசாரணை செய்திட வழி வகுக்கிறது?

(A) கு.வி.மு.ச.பிரிவு 221/பி.என்.எஸ்.எஸ். பிரிவு 244

(B) கு.வி.மு.ச.பிரிவு 222/பி.என்.எஸ்.எஸ். பிரிவு 245

(C) கு.வி.மு.ச.பிரிவு 223/பி.என்.எஸ்.எஸ். பிரிவு 246

(D) கு.வி.மு.ச.பிரிவு 224/பி.என்.எஸ்.எஸ். பிரிவு 247

48) Which statement is not corect in regard to counterfeit?

(A) Who causes one thing to resemble another

✓(B) To imitate it exactly

(C) Knows that by act deception will be practised

(D) Intend by means of resemblance to practice deception

கீழ்கண்டவற்றில் எது ஒரு போலிக்கு ஒவ்வாதது

(A) ஒரு பொருளைப்போல் இன்னொன்றை செய்வது

(B) சற்றும் வித்தியாசம் இல்லாமல் இன்னொன்றை செய்வது

(C) இதனால் ஒருவர் ஏமாற கூடும் என்று தெரிந்து அவ்வாறு செய்வது

(D) இன்னொருவரை ஏமாற்ற வேண்டும் என்ற எண்ணத்துடன் அவ்வாறு செய்வது

49) The Purpose of examination of the accused under Sec 313 of Cr.P.C. is:

✓(A) To personally explain to the accused the circumstances appearing in the evidence against him

(B) To enable accused to know his defence

(C) To make accused aware of charges

(D) All the above

குற்றவியல் நடைமுறைச் சட்டத்தின் 313 ஆம் பிரிவின் கீழ் குற்றவாளியை விசாரிப்பதற்கான நோக்கம்

(A) சாட்சியத்தில் அவருக்கு எதிராக இருக்கும் நிலைகளை அவருக்கு நேரில் விளக்கும் பொருட்டு

(B) குற்றவாளி அவரது மறுப்புரையை தெரிந்து கொள்ளும் பொருட்டு

(C) அவர் மீது சாட்டப்பட்டுள்ள குற்றங்களை அவருக்கு தெரிவிக்க

(D) மேற்கண்டவைகள் அனைத்தும்

NAME: 

Enrollment No: 

50) Generally, a copy of FIR is filed by the Police Officer to the Magsitrate to take cognizance in compliance with:

(A) Sec 156 of Cr.P.C./Sec 175 of BNSS ✓(B) Sec 157 of Cr.P.C./Sec 176 of BNSS

(C) Sec 158 of Cr.P.C./Sec 177 of BNSS (D) Sec 159 of Cr.P.C./Sec 178 of BNSS

சாதாரணமாக முதல் தகவல் அறிக்கை எந்த பிரிவின் கீழ் காவல் அதிகாரியால் குற்றவியல் நீதிபதியிடம் புலன் கொள்ளுதலுக்காக தாக்கல் செய்யப்படுகிறது?

(A) கு.வி.மு.ச. பிரிவு 156/பி.என்.எஸ்.எஸ். பிரிவு 175

(B) கு.வி.மு.ச. பிரிவு 157/பி.என்.எஸ்.எஸ். பிரிவு 176

(C) கு.வி.மு.ச. பிரிவு 158/பி.என்.எஸ்.எஸ். பிரிவு 177

(D) கு.வி.மு.ச. பிரிவு 159/பி.என்.எஸ்.எஸ். பிரிவு 178

**<u>*Note.1:-</u>** Invariably all the candidates will be awarded one mark for Question No.12 in addition to the actual mark obatined by each of them.